**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை: திரு.R.V. ராஜகுமார், B.L.,**
**தலைமை குற்றவியல் நடுவர், திருவில்லிபுத்தூர்**
**2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16–ஆம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை விசாரணை வழக்கு எண்.461/2021**
CNR No.TNVR02-001957-2021

அரசுக்காக:–
காவல் ஆய்வாளர்,
திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,
குற்ற எண்.29/2021
இ.த.ச.பிரிவுகள் 279, 304(A) ...... குற்றமுறையிடுபவர்

**–எதிர்–**

செல்லத்துரை, (வயது 35/2021),
த/பெ.பால்ச்சாமி,
8/3, அழகுதெய்வேந்திரபுரம்,
துலுக்கன்குளம்,
பிள்ளையார்குளம் அஞ்சல்,
திருவில்லிபுத்தூர் தாலுகா.

...... எதிரி

**வழக்கு விசாரணை விவரங்கள்**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | எதிரி கடந்த 22.01.2021ம் தேதி காவல்துறையால் கைது செய்யப்பட்டு அன்றே காவல்நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 21.01.2021/31.08.2021 |
| 3. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| 4. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் | : | 09.11.2021 |

கேள்வி கேட்கப்பட்ட தேதி(பொருந்துவதை குறிப்பிடவும்)

5. கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட :

Cr.M.P.No.911/2024, U/s.311 Cr.P.C–இன் கீழ் 07.06.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது.

Cr.M.P.No.268/2025, U/s.348 BNSS–இன் கீழ் 07.04.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது.

Cr.M.P.No.22/2025, U/s.72(2) BNSS–இன் கீழ் 12.12.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் :

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 29.04.2024 | 18.07.2025 |
| அ.சா.2 | 06.05.2024 | 06.05.2024 |
| அ.சா.3 | 10.05.2024 | 10.05.2024 |
| அ.சா.4 | 10.05.2024 | 10.05.2024 |
| அ.சா.5 | 07.06.2024 | 07.06.2024 |
| அ.சா.6 | 21.06.2024 | 30.06.2025 |
| அ.சா.7 | 01.08.2025 | 01.08.2025 |
| அ.சா.8 | 19.01.2026 | 19.01.2026 |
| அ.சா.9 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.10 | 18.06.2026 | 18.06.2026 |

7. கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–இன் படிகுற்றஞ்சாட்டப்பட்டவர்களை : 30.06.2026

| | | | |
|---|---|---|---|
| | கேள்வி கேட்ட தேதி | | |
| 8. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | இல்லை |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை |

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண். 106(1)–ன் படி விபரங்கள்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வ.எண். | : | CC 461/2021 |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம், குற்ற எண்.29/2021<br>இ.த.ச.பிரிவுகள் 279, 304(A) |
| 3. | **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்** | | |
| | பெயர் | : | செல்லத்துரை, (வயது 35/2021), |
| | | | த/பெ.பால்ச்சாமி, |
| | தகப்பனார் / கணவர் பெயர் | : | 8/3, அழகுதெய்வேந்திரபுரம், |
| | | | துலுக்கன்குளம், |
| | தொழில் | : | பிள்ளையார்குளம் அஞ்சல், |
| | | | திருவில்லிபுத்தூர் தாலுகா. |
| | இருப்பிட முகவரி | : | |
| | வயது | | |

**தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு | : | 21.01.2021 |

| | | | |
|---|---|---|---|
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 21.01.2021 |
| 6. | கைது செய்யப்பட்டது | : | 22.01.2021 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | 22.01.2021 (காவல்நிலைய பிணை) |
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 29.04.2024 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 18.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 16.07.2026 |
| 12. | தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி | : | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை. |

13. கால தாமதத்திற்கான காரணம் : காவல்துறை தரப்பில் சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்ய கால தாமதம் ஏற்பட்டதால் வழக்கு நடவடிக்கைகளிலும் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது.

இவ்வழக்கானது முதலில் திருவில்லிபுத்தூர் நீதித்துறை நடுவர் எண்.2– நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.461/2021 ஆக கடந்த 02.09.2021 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணை நடைபெற்று, பின்பு திருவில்லிபுத்தூர் மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களின் கடித எண்.1074/23 நாள்.26.05.2023 நடவடிக்கையின்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு கடந்த 16.02.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணை நடைபெற்று, என் முன்பாக 13.07.2026-ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.S. பரணீந்தர், M.A., LLB., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்

திரு.G.சந்திரசேகரன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

**1.** கடந்த 21.01.2021 ஆம் தேதி காலை 05.45 மணிக்கு அ.சா.1–முருகன் என்பவரின் மைத்துனர் வீரபொம்மு என்பவர் மதுரை–திருவில்லிபுத்தூர் ரோட்டில் செல்வி ஆட்டோமோட்டிவ்ஸ் என்ற கம்பெனிக்கு வடக்கில் நிகானா ஸ்ரீ ஓட்டல் அருகில் மேற்படி தென்வடலாக செல்லும் ரோட்டின் மேற்குபக்கம் ரோட்டில் ஓரத்தில் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோட்டுக்குள் வடக்கிலிருந்து தெற்காக நடந்து வந்து கொண்டிருந்தபோது அவருக்கு எதிரில் எதிரி செல்லத்துரை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 84 D 4131 என்ற எண் கொண்ட FORCE வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி வீரபொம்மு மீது மோதி காயங்களை ஏற்படுத்தி சம்பவயிடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரி சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு இதச பிரிவுகள் 279, 304(A)-இன் படி குற்றம் குறித்து வினவியபோது, எதிரி பொய்வழக்கு என மறுத்துள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்றுப்பொருள் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

கடந்த 21.01.2020 ஆம் தேதி காலை 05.10 மணிக்கு அ.சா.1–முருகனின் மைத்துனர் வீரபொம்மு என்பவர் திருவில்லிபுத்தூர்–மதுரை மெயின்ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்வி ஆட்டோமேட்டிக் கம்பெனிக்கு வடக்கு பக்கம் நிகானஸ்ரீ ஹோட்டலுக்கு எதிர்புறம் ரோட்டின் ஓரமாக வாக்கிங் சென்றுகொண்டிருந்தார். அப்போது அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஒரு வாகனம் ஆனது மேற்படி வீரபொம்மு மீது மோதி தூக்கி எறிந்துவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. அதனால் வீரபொம்முவிற்கு இரண்டு காலின் பாதத்திலும், முழங்காலிலும், வலதுகை முட்டியிலும் சிராய்ப்பு காயம் மற்றும் உதட்டிற்கு கீழ் நாடிக்கு மேல் ரத்தக்காயமும், வலது கண்ணுக்கு கீழ் சிராய்ப்பு காயமும், தலையின் முன்பக்க நெற்றியில் வெட்டுக்காயமும் ஏற்பட்டு இறந்துபோய்விட்டார். எனவே, அ.சா.1–முருகன் 21.01.2021 ஆம் தேதியன்று காலை 08.15 மணிக்கு காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1–புகார்மனுவை அ.சா.9–சார்பு ஆய்வாளர் பாபு என்பவர் பதிவு செய்து குற்ற எண்.29/2021, இதச பிரிவு 279, 304(A)–இன் கீழ் அ.சா.ஆ.5–முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்பு மேற்படி வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே காலை 09.15 மணிக்கு சம்பவ இடம் சென்று அ.சா.2–வசந்தகுமார், சாட்சி மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.2–பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.6–மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தும், அன்றே மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் உள்ள விபத்து ஏற்படுத்திய வாகனம் இடதுமுன்பக்க வீலின் ப வடிவில் உள்ள கருப்பு கலர் ஆர்ச்–யை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், 21.01.2021 அன்று திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்துபோன வீரபொம்மு என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.7–பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், பிரேத பரிசோதனை மேற்கொள்ள பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்தும், பின்னர் 22.01.2021 ஆம் தேதி அ.சா.7–காவல் ஆய்வாளர் மலையரசி மேற்படி

வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் எதிரியை தேடி சென்று எதிரி அபி இண்டஸ்ட்ரீஸ் என்ற மில்லில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது அ.சா.5–பரமசிவம், முத்தையா ஆகியோர் முன்னிலையில் எதிரி செல்லத்துரையை 22.01.2021 ஆம் தேதி 16.15 மணிக்கு கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், மேலும் எதிரி மற்றும் சாட்சிகளுடன் வன்னியம்பட்டி விலக்கில் அமைந்துள்ள கோவிந்தன் என்பவரது ஒர்க்ஷாப்பில் எதிரி அடையாளம் காட்டிய TN 84 B 4131 என்ற பதிவெண் கொண்ட போர்ஸ் நான்குசக்கர வாகனத்தை பார்வையிட்டும், எதிரியை நிலையம் கொண்டு வந்து தக்க நிலைய பதிவேடுகளில் பதிவு செய்த பின்னர் தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தும், சாட்சிகளை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தும், இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன வீரபொம்முவின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ.10–பிரேத பரிசோதனை சான்று வழங்கிய அரசு மருத்துவர் சுரேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், இவ்வழக்கு விபத்தினை ஏற்படுத்திய TN 84 B 4131 என்ற பதிவெண் கொண்ட போர்ஸ் நான்குசக்கர வாகனத்தை ஆய்விற்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அ.சா.ஆ.11–ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் ஜாஸ்மின் மெர்சி கமலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அ.சா.10– காவல் ஆய்வாளர் பாஸ்கரன் மேற்படி வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சொத்துககளை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் II–இல் ஒப்படைத்து பி.ஆர்.நம்பர் 96/2021 பிரகாரம் கொடுக்கப்பட்டதாகவும், வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)–இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5)** அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–இன்படி வினவியபோது எதிரி சாட்சியங்களை பொய் எனக் கூறி மறுத்து தனது தரப்பில் சாட்சிகள் உண்டு என்று கூறியுள்ளார். பின்பு எதிரி தரப்பில்

விசாரிக்க சாட்சிகள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6) தீர்வுக்குரிய பிரச்சனை :–**

அரசு தரப்பால் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**7)** கடந்த 21.01.2021 ஆம் தேதி காலை 05.45 மணிக்கு அ.சா.1–முருகன் என்பவரின் மைத்துனர் வீரபொம்மு என்பவர் மதுரை–திருவில்லிபுத்தூர் ரோட்டில் செல்வி ஆட்டோமோட்டிவ்ஸ் என்ற கம்பெனிக்கு வடக்கில் நிகானா ஸ்ரீ ஓட்டல் அருகில் மேற்படி தென்வடலாக செல்லும் ரோட்டின் மேற்குபக்கம் ரோட்டில் ஓரத்தில் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோட்டுக்குள் வடக்கிலிருந்து தெற்காக நடந்து வந்து கொண்டிருந்தபோது அவருக்கு எதிரில் எதிரி செல்லத்துரை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 84 D 4131 என்ற எண் கொண்ட FORCE வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி வீரபொம்மு மீது மோதி காயங்களை ஏற்படுத்தி சம்பவயிடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரி சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்பது அரசு தரப்பு வழக்கு ஆகும்.

**8)** இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச்சட்டத்தின் மேற்படி 279, 304(A) பிரிவுகளானது பின்வருமாறு கூறுகின்றது.

**279 – Rash driving or riding on a public way** – Whoever drives any vehicle, or rides, on any public way in a manner so rash or negligent as to endanger human life, or to be likely to cause hurt or injury to any other person, shall be punished with imprisonment if either description for a term which may extend to six months, or with fine which may extend to one thousand rupees, or with both.

**304 A. – Causing death by negligence –** Whoever cause the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide, shall be punished with

imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both.

**9)** மேற்படி இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளவாறு எதிரி செல்லத்துரை என்பவர் TN 84 D 4131 என்ற எண் கொண்ட FORCE வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து வீரபொம்மு மீது மோதி அவருக்கு மரணத்தை விளைவித்துள்ளார் என்ற எதிரி மீதான குற்றத்தை அரசு தரப்பானது சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதா? என்பதை ஆராய வேண்டும்.

**10)** இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1–முருகன் மற்றும் அ.சா.8–சேதுராமு ஆகியோர் வழக்கு சம்பவத்தை கேள்விபட்டது பற்றியும், அ.சா.3–வினோத், அ.சா.4–சதீஸ்குமார் மற்றும் அ.சா.6–முனியராஜ் ஆகியோர் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாகவும், அ.சா.5–பரமசிவம் என்பவர் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது சம்பந்தமாகவும், அ.சா.2–வசந்தகுமார் சம்பவயிடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரி வரைபடம் தயாரித்தது சம்பந்தமாகவும், அ.சா.7–காவல் ஆய்வாளர் மலையரசி வழக்கின் எதிரியை கைது செய்து விசாரணை செய்தது சம்பந்தமாகவும், அ.சா.9–சார்பு ஆய்வாளர் பாபு என்பவர் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட விசாரணை செய்தது சம்பந்தமாகவும், அ.சா.10–காவல் ஆய்வாளர் பாஸ்கர் வழக்கினை மேல்விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது சம்பந்தமாகவும் சாட்சியமளித்துள்ளனர்.

**11)** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1–முருகன் அவரது அ.சா.ஆ.1–புகார்மனுவில், **"....21.01.2021 ஆம் தேதி காலை சுமார் 05.10 மணியளவில் வீரபொம்மு வீட்டிலிருந்து கிளம்பி வாக்கிங் செல்வதை என்னுடைய அண்ணன் கோடியப்பன் மகன் வினோத் பார்த்ததாக என்னிடம் சொன்னார். காலை சுமார் 05.45 மணிக்கு திருவில்லிபுத்தூர்–மதுரை ரோட்டில் உள்ள செல்வி ஆட்டோமோட்டிவ்ஸ் என்ற கம்பெனிக்கு வடக்கில் நிகானஸ்ரீ ஓட்டல் என்ற பெயரில் ஓட்டல் நடத்தி வரும் எங்கள் ஊரை சேர்ந்த மாரியப்பன் மகன்**

**சதீஷ்குமார் என்பவர் எனக்கு போன் செய்து அவர் ஓட்டல் திறப்பதற்கு காலை டிபன்கள் தயார் செய்துகொண்டிருந்தபோது அவர் ஓட்டலுக்கு அருகில் டம்மென்று வாகனம் மோதும் சத்தம்கேட்டு சதீஷ்குமாரும், அவரது ஓட்டலில் வேலை பார்க்கும் எங்க ஊர் செல்வமுனி மகன் முனியராஜ் என்பவரும் வந்து பார்த்தபோது என் மைத்துனர் ரோட்டின் மேற்குபக்கம் குப்புற கிடந்துள்ளார். அப்போது ஒரு வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வேகமாக சென்றுள்ளது....."** என்று கூறியுள்ளார். ஆனால் மேற்படி புகார்தாரரான அ.சா.1–முருகன் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் சதீஷ் என்பவர் போன் மூலம் சம்பவம் பற்றி தனக்கு தகவல் சொன்னதாக சொல்லியுள்ளார். எனவே, அ.சா.1 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. மேலும் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3–வினோத் என்பவர் தனது சாட்சியத்தில், **"....05.45 மணிக்கு வீரபொம்மு, செல்வி ஆட்டோமொபைலுக்கு மேற்கும், நிகாஸ்ரீ ஹோட்டலுக்கு அருகே விபத்து ஏற்பட்டு ரோட்டில் குப்புற கிடப்பதாக கேள்விப்பட்டேன்....."** என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் சம்பவம் பற்றி அ.சா.1–ற்கு தகவல் சொன்ன அ.சா.4–சதீஷ் என்பவர் தனது சாட்சியத்தில், **"....அப்போது எங்கள் ஓட்டலில் உள்ள விறகு அடுப்பை தயார் செய்து கொண்டிருந்தோம். அப்போது ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற ஒரு வண்டியானது டமார் என்று சத்தம் கேட்டு விபத்தானது என்றும், சத்தம் கேட்டவுடன் நானும், எனது மாஸ்டரும் சென்று பார்த்தபோது வீரபொம்முவிற்கு கை, கால் மற்றும் முகம் ஆகிய இடங்களில் காயம் காணப்பட்டது. அந்த விபத்தை ஏற்படுத்திய வண்டியானது அதிவேகமாக சென்றுவிட்டது....."** என்று சாட்சியமளித்துள்ளார். அதேபோல் மேற்படி அ.சா.4–இன் ஓட்டலில் மாஸ்டராக வேலை பார்த்து வரும் அ.சா.6–முனியராஜ் என்பவர் அவரது சாட்சியத்தில், **"....எங்களது ஹோட்டலுக்கு மேற்கு பக்கம் அப்போது சத்தம் கேட்டது, நாங்கள் போய் பார்த்தபோது ஒரு மில் வண்டி க்ரூசர் வேகமாக சென்றது. ரோட்டிற்கு மேற்கு பக்கம் எங்களது ஊரை சேர்ந்த வீரபொம்மு என்ற நபர் அடிபட்டு கிடந்தார்....."** என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோரும் மேற்படி சத்தம் கேட்டபின்புதான் சம்பவத்தை பார்த்துள்ளார்கள். எனவே, மேற்படி

வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க அ.சா.1, அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சியமானது போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**12)** வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.8–சேதுராமு தனது முதல்விசாரணை சாட்சியத்தில், **"....எனது மகன் வீரபொம்மு வழக்கமாக காலை 05.00 மணிக்கு நடைபயிற்சி மேற்கொள்வார். 21.01.2021 ஆம் தேதி காலை சுமார் 05.45 மணியளவில் ஒரு கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், எங்கள் ஊரில் கடை வைத்திருக்கும் ஒரு நபர்அதை பார்த்துவிட்டு எனது மருமகன் முருகனிடமும், எனது மகளிடமும் போன் மூலமாக தகவல் தெரிவித்தார்...."** என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.8 வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியை தவிர சம்பவ சாட்சி அல்ல. எனவே, அ.சா.8–இன் சாட்சியமானது அரசு தரப்பிற்கு ஆதரவானதாக இல்லை.

**13)** ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5–பரமசிவம் என்பவரின் சாட்சியமானது TN 84 D 4131 என்ற வாகனம்தான் விபத்தில் சம்பந்தப்பட்டது என்பதை நிரூபிக்க போதுமானதாக இருந்தாலும், அதனை ஓட்டி வந்த எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லை.

**14)** பார்வைமகசர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2–வசந்தகுமார் என்பவரின் சாட்சியமானது வழக்கு சம்பவயிடத்தை சார்பு ஆய்வாளர் பார்வையிட்டுள்ளார் என்பதற்குதான் ஆதரவாக உள்ளதே தவிர எதிரியின் மீதான கவனக்குறைவான மற்றும் அஜாக்கிரதையான செய்கையை தீர்மானிக்க போதுமானதாக இல்லை.

**15)** மேலும் மேற்படி அ.சா.7, அ.சா.9, அ.சா.10 ஆகியோரின் சாட்சியமானது இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தல் மற்றும் புலன்விசாரணை

சம்பந்தமாகத்தான் உள்ளதே தவிர எதிரியின் மீதான குற்றத்தை நிரூபிக்க போதுமானதாக இல்லை. எனவே, மேற்படி எதிரியின் மீதான அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினையோ நிரூபிக்க அரசு தரப்பினால் போதிய சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**16)** மேலும் மேற்படி எதிரி மீது சுமத்தப்பட்ட 279, 304(A) பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள உட்கூறுகள் எதுவும் இவ்வழக்கில் பூர்த்தியாகவில்லை. மேலும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களுக்கிடையே மிகுந்த முரண்பாடு காணப்படுகிறது. மேலும் சம்பவயிடத்தை சுற்றியுள்ள நபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மொத்தத்தில் அரசு தரப்பு வழக்கானது தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்யலாம் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன் படி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255(1)–இன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.ஆர்.எண்.02/2024–இல் கண்ட வழக்குச்சொத்தான சா.பொ.1–ஒரு வாகனத்தின் இடதுபக்க முன் வீலின் "ப" வடிவில் உள்ள கருப்பு கலர் ஆர்ச்–யை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழித்துவிட உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, **2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16–ஆம் நாளாகிய** இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.07.16 18:21:23 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

அ.சா.1 திரு.முருகன்

அ.சா.2 திரு.வசந்தகுமார்

அ.சா.3 திரு.வினோத்

அ.சா.4 திரு.சதீஸ்குமார்

அ.சா.5 திரு.பரமசிவம்

அ.சா.6 திரு.முனியராஜ்

அ.சா.7 திருமதி.மலையரசி (காவல் ஆய்வாளர்)

அ.சா.8 திருமதி.சேதுராமு

அ.சா.9 திரு.பாபு (சார்பு ஆய்வாளர்)

அ.சா.10 திரு.பாஸ்கர் (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

அ.சாஆ.1 புகார்மனு

அ.சாஆ.2 பார்வைமகசர்

அ.சாஆ.3 அத்தாட்சி

அ.சாஆ.4 ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.5–பரமசிவம் என்பவரின் கையெழுத்து

அ.சாஆ.5 முதல்தகவல் அறிக்கை

அ.சாஆ.6 மாதிரி வரைபடம்

அ.சாஆ.7 விபத்தில் இறந்துபோன வீரபொம்முவின் பிரேத விசாரணை அறிக்கை

அ.சாஆ.8 ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.9 படிவம் 91

அ.சா.ஆ.10 விபத்தில் இறந்துபோன வீரபொம்முவின் பிரேத பரிசோதனை அறிக்கை

அ.சா.ஆ.11 TN 84 D 4131 என்ற பதிவுஎண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை

அ.சா.ஆ.12 முதல்தகவல் அறிக்கை (ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)

அ.சா.ஆ.13 மாதிரி வரைபடம் (ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)

அ.சா.ஆ.14 அத்தாட்சி (ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)

**அரசு தரப்பு சான்றுப் பொருள்** –

சா.பொ.1 – ஒரு வாகனத்தின் இடதுபக்க முன் வீலின் "ப" வடிவில் உள்ள கருப்பு கலர் ஆர்ச்

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

**குறிப்பு–**

1) வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2) வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3) சாட்சிகள் 3 கேட்புகளுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.07.16 18:21:31 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவில்லிபுத்தூர்.

Chief Judicial Magistrate Court,
Srivilliputhur.
C.C.No.461/2021
Judgment
Dated: 16.07.2026